DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| OS.No. | : | 204/2021 |
| Deposition of Witness for | : | P.W.1 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | நாராயணன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 23.01.2026

**முதல் விசாரணை:**

நான் வாதி. நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 25.09.2020 ம் தேதியிட்ட தாவாச் சொத்திற்கு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் வழங்கிய 'அ' பதிவேடு சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. 21.10.1988 ம் தேதியிட்ட தாவாச் சொத்திற்கு வாதி அரியக்குடி கிராம நிர்வாக அதிகாரியிடம் செலுத்திய வரி இரசீது அசல் **வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. 11.05.2019 ம் தேதியிட்ட தாவாச் சொத்திற்கான 10(1) கணினி பட்டா நகல் **வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. தாவாச் சொத்தினை காண்பிக்கக்கூடிய புலப்படம் கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. 01.05.2021ம் தேதியிட்ட வாதி தன் வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் அசல் ரசீதுகளுடன் **வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. 03.05.2021ம் தேதியிட்ட மேற்படி அறிவிப்பினை 1ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் **வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7. 03.05.2021ம் தேதியிட்ட மேற்படி அறிவிப்பினை 2ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் **வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

8. 03.05.2021ம் தேதியிட்ட மேற்படி அறிவிப்பினை 3ம் பிரதிவாதிக்கு சார்பாகாமல் திருப்பப்பட்ட கவர் அசல் **வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது).**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.